கட்டைக்காடு-வெற்றிலைக்கேணியில் கடும் மோதல்

நல்லூர் தொல்லியல் மன்றம்
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 14 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 23 இதழ் 25
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 06—03—1992

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் நேற்று முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப்புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் பல இராணுவத்தினர் உயிரிழந்த தாகவும் பலர் படுகாயமடைந்தார் (4ம் பக்கம் பார்க்க)

கூனையிறவு முகாம் காவலரண் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கூனையிறவு முகாம் பகுதியிலுள்ள இரு காவரண்களை விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை திடீர் மூல மாக்கப் படைத்தாக தெரிவிக்கப்படுகிறது. சுமார் ஐந்தரை மணி நேரம் நடைபெற்ற சண்டையில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பல (4 ம் பக்கம் பார்க்க)

4 தமிழ் மீனவர்கள் ஏருவூரில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

ஏருவூரில் நடந்த தமிழ் மீனவர்கள் மூவரின் மரண பரிசோதனை அறிக்கை சட்டவைத்திய அதிகாரியினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏருவூரிலுள்ள தமிழ் மக்கள் பேரும் பதற்றம் நிலவுகிறது.

இதுதொடர்பான தொடர் (4-ம் பக்கம் பார்க்க)

★ தமிழகத்திலுள்ள தமிழ்

அகதிகளை அனுப்பவேண்டாம்

அமெரிக்கா அவசர கோரிக்கை

தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை உடனடியாக நிறுத்துமாறு இந்திய அரசை அகதிகளுக்கான அமெரிக்க நாடாளுமன்ற கமிட்டி அவசரமாக கோரியுள்ளது.

இதுகுறித்த அவசர வேண்டுகோளை அமெரிக்க நாடாளுமன்ற இந்திய விற்கு அனுப்பியுள்ளது.

இதேவேளை அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக பல சர்வதேச அமைப்புகளும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பல சென்றிருக்கின்றன.

எனினும் சர்வதேச அமைப்புகளின் கோரிக்கை இவ்விரு நாடுகளும் (4-ம் பக்கம் பார்க்க)

புலிகள்மேல் இந்தியா அச்சம்

(சென்னை)

"நாம் சொல்லும் அபிப்பிராயத்தை இருத்திவிட்டால் புலிகள் அந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி விடுவார்கள்"

என இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு சரத்பவார் தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஊடுருவல் (4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் அகதிகளை அச்சுறுத்துவதை இந்தியா நிறுத்த வேண்டும்

(திருச்சோலை)

இலங்கை தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாகத் தாயகத்திற்கு அனுப்பும் மனிதாபிமானமற்ற செயலை இந்திய அரசு நிறுத்தவேண்டுமென அமெரிக்காவிலுள்ள 'மனித உரிமைகள் இந்திய அரசும் தமிழக அரசும் இனி நீதிமன்றம்' கோரியுள்ளது.

அமெரிக்க மேலவை தெரிவுக்குழுவில் அகதிகள் திருப்பி அனுப்பு முடிவு இலங்கையில் வாழ்கின்ற திரு பவேண்டும் என்பதை இந்திய உறுதி செய்யவேண்டும்.

அகதிகள் விவாரணத்திற்கு திடீரென செலவுகளை குறைக்கவும் அவர்களுக்கு சேவை வானவசதிகளை செய்துகொடுக்கவும் அகதிகள் புனர்வாழ்வுக் (4-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை கொழும்புக்கு எடுத்துவர பரீட்சார்த்த முயற்சி

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிவர கொழும்பு பரீட்சார்த்தமாக அனுப்பும் கப்பல் நாளை (நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் நாளை நாகபட்டினத்திலிருந்தே முதலில் செல்லவிருப்பதாகவும் இந்த கொழும்பு துறைமுக பாதையில் (நாளை மறுதினம்

ஞாயிறன்று செல்லும்போது முதல் (4-ம் பக்கம் பார்க்க)

வட - கிழக்கு அபிவிருத்திக்கு 720 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு, புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கு 720 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக வாழ்வு புனரமைப்பு நல அமைச்சின் செயலாளர் திரு. நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: இந்தியாவிலிருந்து இதுவரை 6000 தமிழ் அகதிகள் இலங்கை வந்துள்ளனர். தங்களை (4ம் பக்கம் பார்க்க)

100க்குமேல் வன்னியில் வீடுகள் சேதம்

(வவுனியா)

வவுனியா பகுதியில் கடந்த இருவாரம் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளும், கடைகளும் பகுதி சேதமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

கிளாலியூடாக வீச்சிலுவைச் சங்கமும், பிரதேச சபைகளும் (4ம் பக்கம் பார்க்க)

ஐ. நா. மனித உரிமை குழு மீண்டும் இலங்கை வருகிறது

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் இவ்வாரம் மீண்டும் இலங்கைக்கு வரவிருக்கின்றனர்.

இலங்கையில் மனித உரிமை தொடர்பான நிலைமைகளை ஆராய்வதற்காக இக்குழு பிரதிநிதிகள் வருகைதரவிருப்பதாக ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம்

ஆணையாளர் திரு. பிரகாஷ் சர்மாவை தெரிவித்தார்.

இலங்கைவந்த திரும்பிய பின்னர் குழுவினர் இவ்வருட (4ம் பக்கம் பார்க்க)

கடற்பகுதியில் கைதான 121 மீனவர் பட்டியல்

(யாழ்ப்பாணம்)

கடற்பிராந்தியத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 121 மீனவர்களின் பெயர் விபரங்களை கடற்படை தலைமையகம் (4-ம் பக்கம் பார்க்க)

ஒபறேசன் கிறீன்பே திருமலையில் தொடங்கிறது

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் ஒபறேசன் கிறீன்பே (பசுமைத்தாக்குதல்) இராணுவ நடவடிக்கை தொடர்ந்து 6-வது நாளாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவ நடவடிக்கையில் பெருமளவு படையினர் ஈடுபட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நாற்பது கோடி ரூபா சீனா கடனுதவி

(கொழும்பு)

இலங்கைக்கு நாற்பது கோடி ஐம்பதாயிரம் ரூபா கடனுதவியை சீனா வழங்கவுள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் நேற்று இலங்கை-சீனா அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கடன்தொகை மூலம் சீனாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பல பொருள்களுக்கான செலுத்தப்படவேண்டிய இடைப்பட்ட வட்டிவீதம் வழமையானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வரி விளம்பரம்

ஆங்கில வகுப்புகள்

Spoken English A/L, G. C. E. (O/L) பகுதிகளுக்கு சிறந்த பேராசிரியர்களால் முறையிலும் மாடல்கள் தெரிவிக்கப்படும். தனித்தனி வகுப்புகள் உண்டு. தகுதி (1) சே பொருளாதாரம் B A; தர்க்கவியல் B A. (London) உடன் கிண்ணப் பிரதிகளுடன் 25/4 B. M. C. முதலாவது, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(இ-6037)

M. Sc.

Biotechnology

"Graduates in Chemical, Biological, Medical, Dental Veterinary, agricultural and Engineering Sciences will be considered Forward Appllcation with biodata All applicants will be required to sit for a qualifing examination and a vica Address correspondence to Registrar, University of Jaffna, Jaffna.

Closing date 16-th of March 9921.

(A 1967)

THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY

Graduates/Postgraduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in plant tissue culture and genetic engineering The fellowship will be awarded to the most suitable applicant affter an interview. A monthly allowance of Rs 2 500/- shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by reapplying for the fellowship. The fellowship may be terminated at any time if the prodect is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.

The closing date for applications will be 0£ - 04 - 1992.

Registar,
University of Jaffna,
A-1968.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஆடைகள் / துணிகள் சலவைசெய்து வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாதத்தில் இரு தடவைகள் டீஜல் செய்து, ஆடைகள்/துணிகளை சலவை செய்து மீளத் தரும் சேவையை தொழிலாளரின் சேவை கோரப்படுகின்றது.

மேற்படி சேவைகளை மீள்வழங்கும் படி வழங்க விரும்பும் யாழ்ப்பாண நகரசேவைகள் நிலையங்கள் 13-03-92 வரை குறுகிய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். கிண்ணப் பத்திரம் 13 03-92 பி. ப. 4-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்

(ஏ-1970)

---

13 ஆசிரியர்களுக்கு மார்ச்சில் நியமனம்

(உடுவில்)

ஆரம்ப ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு கோண்டாவில் இராஜாவின் தோட்டத்தில் சேவையாற்றிய பிரதம் தரபோதனா ஆசிரியை செல்வகுமாரிக்கு நியமனம் பதினேழு ஆசிரியர்களும் மார்ச் மாதம் முதல் வாரம் முதல் வாரம் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கினர்.

திரு. செ. நேரில்பராசசிங்கம் - நவாலியூர் மத்தி, செல்வி து. நடராசா-நீர்வேலி அந்தோனியார் இந்து, திரு. இ. மதிமதன் - கோவெட்டி சரஸ்வதி வித்தியாலயம், செல்வி ஒ. எனெஸ்ரின் - நித்தியா தித்திநாயகர் வித்தியாலயம், திருமதி இரா. ஜெயதேவி - தேவரையாளி இந்து, செல்வி இ. எழில் நாதினி - யாழ் சென்மேரிஸ், செல்வி ப. பத்மசோதினி - உடுப்பிட்டி மகாவித்தியாலயம், செல்வி வ. ஜெயரூபினி - மானிப்பாய் செல். ஆன்ஸ், செல்வி மு. ஜெ. பிரேமசோதா - அந்தோனைதமிழ் கலவன், கரவெட்டி, செல்வி பா. ஜெராதி - மல்லாகம் ஞானவைரவர் பாடசாலை, செல்வி கி. சுகுணா - மந்துவில் சந்திரபுர வித்தியாசாலை.

மா. கி., திரு. எ. எழில் - பாசையூர் செல். அந்தோனியார் ரோ. க., திரு. ஜே. ஏ. திரு ஞானம் - சென்பற்றிக்ஸ் (109)

நேர்முகம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் 1992ம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவுள்ள பயில விண்ணப்பித்த மாணவர்களை நேர் முகப் பரீட்சை எதிர்வரும் 14ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் கலாநிதியல் சுதாகரன் இன்னுயிர்தம்பி அறிவித்துள்ளார்.

விண்ணப்பித்தோர் நேர் முகப் பரீட்சைக்கு வரும் போது தங்கி நின்று தேவையான நற்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் சமூகம் தரும்படி வேண்டப்படுகின்றனர்.

வறுமை நிவாரண முத்திரை புதிதாக வழங்கப்படமாட்டாது

(சித்தங்கேணி)

சமுர்த்தி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய வறுமை நிவாரண முத்திரைகள் வழங்கப்படமாட்டாது என அறிவித்துள்ளனர்.

சமுர்த்தி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இருபத்தைந்து கிராம சேவகர் பிரிவிலுமிருந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சுமார் 300 குடும்பங்களே தமக்குப் புதிதாக வறுமை நிவாரண உணவுமுத்திரைகள் வழங்கப்படாமை தொடர்பாக கிராம சேவகர்களிடம் முறையிட்டுள்ளனர். அவர்களுக்கு இந்த வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வழங்கப்படமாட்டாது என அறிவித்துள்ளனர்.

5வது தொகுதி வறுமை நிவாரண உணவு முத்திரைகள் மட்டும் 6வது தொகுதி வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வழங்கப்படாது இருக்கும் என்று கூறப்படுகின்றது. (137)

மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நவலர் மகா வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை 7ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பிரதேசத்தினரை வரும் பாணக் கோட்டப் பிரதி கல்விப்பணிப்பாளர் திரு எஸ். வேலாயுதம் அவர்கள் கலந்து கொள்வார்.

குவைத் நஷ்டஈடு; மறுபரிசீலனைபற்றி தகவல்கள் இல்லை

(யாழ்ப்பாணம்)

குவைத்திலிருந்து வேலைகளை இழந்த இலங்கை திரும்பிய அனைவருக்கும் நஷ்டஈடுவழங்குவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென அரசு கேட்டுள்ளதாக அரசாங்க அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

குவைத்திலிருந்து வேலையிழந்து, வரும் மாவட்டத்தைச் சேர்ந்த நஷ்டஈடு கோரி விண்ணப்பித்த 700க்கும் மேற்பட்டோரின் விண்ணப்பங்களை உரிய இடத்திற்கு அனுப்பி வைத்துவிட்டதாகவும், யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

(மீ)

உள்ளூர் உற்பத்திப் பொருள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் நாளை 7ம் திகதியும், மறுநாள் 8ம் திகதியும் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியை நடாத்தவிருக்கிறது.

இத்தெழ்சியில் பிறப்பு விருத்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வி. தருமரத்தினம், சித்தமிழ்ச்செல்வி நகுலேஸ்வரி குகபாலசுந்தரம், லோறஸ் வ. வைரமுத்து, திருமதி ஜெ. தாட்சாயணி, எஸ். சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொள்ள விருக்கின்றனர். (152)

TASTY பாவனையாளருக்கு

ஒரு நற்செய்தி

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு
மகளிர் அபிவிருத்தி நிலையம்
யாழ் இந்துக் கல்லூரியில்
பங்குனி 7ம், 8ம் திகதிகளில் நடாத்தவுள்ள

பொருட் காட்சியில்

எமது சகல TASTY பொருட்களும் 10% விலைக்கழிவில்
விற்பனை செய்யப்படும். இந்த அரிய சந்தர்ப்பத்தை
நழுவவிடாதீர்கள்

Taste Line Industries(Pvt)Ltd
இல. 14, சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(ஏ-1969)

யாழ்ப்பாணக் கல்லூரி

பரிசளிப்பு விழா - 1992

14-3-92 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு
ஒட்லி மண்டபத்தில் நடைபெறும்

பிரதம விருந்தினர்
பேராசிரியர் வி. தருமரத்தினம்
திருமதி கனகேஸ்வரி தருமரத்தினம்

நண்பர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர்.
யாழ்ப்பாணக் கல்லூரி

(ஏ-1966)

முக்கிய அறிவித்தல்

தேசிய இராணுவ நடவடிக்கையின் போது தவறியில் அகப்பட்ட வாகனங்கள் எடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது. ஆதலால் அந்த வாகனங்களின் உரிமையாளர்கள் அதற்குரிய பதிவுப் புத்தகத்தை சகல ஆவணங்களுடன் உடனடியாக ஒப்படைக்கவேண்டும்.

வ. பி. வை. சு. சங்கம்,
37/2, ஸ்ராண்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மஸ்கன்ஸ்க்கு அருகில்)

(இ-6039)

துருக்கியில் நிலக்கரிச் சுரங்கத்தில் வாயு வெடிப்பு 400 பேர் பலி; 100 பேரை மீட்க முடியவில்லை

(அங்காரா)

வடக்கு துருக்கியில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பயங்கர வாயு வெடிப்பு விபத்தில் சிக்கி 400 பேருக்கு மேற்பட்ட தொழிலாளர் இறந்துள்ளனர்.

இதுவரை 150 உடல்கள் மீட்கப்பட்டன; மீட்புப் பணியினர் தங்கள் மீட்புப் பணியினை தங்கள் மீண்டு செல்லவே வைத்துள்ளனர். 1500 அடி ஆழம் வரை தோண்டி மீட்பு வேலையிலீடுபட்ட பலபேர் வாயு வெளியேறலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனாலேயே மீட்பு வேலை நிறுத்தப்பட்டது. இதேவேளை சுரங்கத்தினுள் 100 பேர் இன்னமும் சிக்கியுள்ளதாகவும் இவர்கள் நிலைமை பற்றி எதுவும் தெரியவில்லை எனவும் கூறப்படுகிறது.

சுரங்கத்தில் வாயு வெடிப்பு ஏற்பட்டபோது 700 தொழிலாளர்கள் வேலையிலீடுபட்டிருந்தனர். பலபேர் மீட்கப்பட்டனர். எனினும் மீட்கப்பட்ட பலர் பின்னர் இறந்துள்ளனர்.

தற்போது மேலும் வாயு வெளியேறும் ஆபத்தை தவிர்க்கவென மீட்புப் பணியினர் [illegible] ஈடுபட்டுள்ளனர். அப்பகுதி [illegible] குறிப்பிட்ட சில மைல் தூரம் [illegible] செய்யப்பட்டுள்ளது.

சுரங்கத்தினுள் சிக்கியுள்ளவர்களை மீட்கவென விசேட படைப்பிரிவை உடனடியாக அவ்விடத்திற்கு அனுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (வே)

வவுனியா ரயில் நிலையத்தை புதுப்பிக்க ஏற்பாடு

(வவுனியா)

வவுனியா புகையிரத நிலையம் பல வசதிகள் அமைக்கப்பட்டு புதுப்பிக்கப்படவுள்ளன.

சிற்றுண்டிச்சாலை, பயணிகள் தங்குமிடம், குடிநீர் வசதிகள் ஆகிய வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ் வேலைகள் மே மாதத்தில் பூர்த்தியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வே)

உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் விசவத்தனை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான மகோற்சவம் இம்மாதம் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

வேட்டைத் திருவிழா 16-ம் திகதி திங்கட்கிழமையும், சப்பரத் திருவிழா 17-ம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத் திருவிழா 18-ம் திகதியும் பூங்காவனத் திருவிழா 19-ம் திகதியும் சங்காபிஷேகம் 27-ம் திகதியும் இடம்பெறும். (152)

உணவு முத்திரை கப்பலில் வரும்

(யாழ்ப்பாணம்)

அக்டோபர் மாதம் பெப்ரவரி மாதத்திற்கான மாணவர்களுக்கான உணவு முத்திரைகள் நாளை 7-ம் திகதி வரவிருக்கும் கப்பலில் எடுத்துவரப்படவுள்ளது. (56)

வன்னியில் படைகள் முகாம் திரும்பின

(வவுனியா)

கடந்த ஒருவார காலமாக வவுனியாவுக்கு வடக்கே ராணுவத்தினர் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு ராணுவம் முகாம்களுக்கு திரும்பிவிட்டன.

இந்த நடவடிக்கையில் சுமார் 4000 படையினர் ஈடுபட்டதாகவும், பீரங்கி, டாங்கி படைகளும் இதில் பங்கு பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வே)

தீவகத்தில் கடமையாற்ற பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி வைத்தியசாலையில் வைத்திய உத்தியோகத்தர்கள் கடமையாற்றி பின்னர் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த தாதிமார் யாழ். மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் கடமை புரிந்து வரும் வைத்தியரை உடன் தீவுப்பகுதிக்கு வந்து கடமை புரியுமாறு அரசினால் பணிக்கப்பட்டுள்ளனர். (56)

கொள்ளை முயற்சி தோல்வி

(பலாலி)

வடமராட்சி கிழக்கிலுள்ள ஒரு ஸ்தாபனத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் பணத்தை பறிக்க முற்பட்ட போது மற்றொருவரின் உதவியுடன் அக்கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது.

இது தொடர்பாக வடமராட்சி கிழக்கிலுள்ள கடற்புலிகளின் செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். எம். பியின்

பணம் கொள்ளை; ஒருவர் பிடிபட்டார்

(கொழும்பு)

யாழ். மாவட்ட எம். பி. திரு. சீனிவாசனிடம் பணத்தை கொள்ளையடித்ததாகக் கூறப்படும் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து ஒரு பகுதி பணமும் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் திரு. சீனிவாசனின் 5 லட்சம் ரூபா பணத்தையும், அவரது காரையும் திருடிச்சென்ற ஒருவர் பணத்தைக் கொண்டு சென்றதுடன் காரை வேறிடத்தில் கைவிட்டுச் சென்றிருந்தார்.

பொலிசாருக்கு முறைப்பாடு கொடுத்ததையடுத்து இந்நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (வே)

தீவுப்பகுதியிலிருந்து 15 பேர் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து ஐந்து கர்ப்பிணிகளும் அவர்களுக்குத் துணையாக பத்துப் பேரும் நேற்று முன்தினம் நண்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

திருமதி மஞ்சுளா [illegible] வர்த்தசிலம் திருமதி சோமேஸ்வரி ஜெயகாந்தன் திருமதி மேரி பௌலுஸ், திருமதி சத்தியபாமா சத்தியசீலன் திருமதி தங்கம்மா மகேஸ்வரன் ஆகியோருடன் பத்துப் பேர் நயினாதீவு கடற்படையினரால் காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்பட்டு, பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் யாழ். போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். (56)

அவசரகால கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அவசரகால சூழ்நிலையில் பணியாளர் முதலுதவிப் படையினர் செயல்படவேண்டிய விதம், அவர்களினால் பொறுப்பேற்கப்படவேண்டிய கடமைகளான, காயமடைந்தோருக்கான அவசர முதலுதவி, காயமடைந்தோரை சிகிச்சைக்காக பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தல், இடம்பெயர்ந்தோரை பராமரித்தல் அகதி முகாம்களில் சுகாதாரம் பேணுதல், தொற்றுநோயின் பரவலிலிருந்து மக்களைப் பாதுகாத்தல் போன்ற கடமைகளை ஆற்றுதல் சம்பந்தமான ஓர் கருத்தரங்கு மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சுமந்திரன் இன்னுமித்தம்பி தலைமையில் எதிர்வரும் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட சகல பிரிவுகளின், தாதிகள் பிரிவுகளைச் சேர்ந்த பிரிவு உத்தியோகத்தர் தரத்திற்கு மேற்பட்ட சகலரையும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இனங்களிடையே பிரிவால்

அரசியல்வாதிகளுக்கு தற்போது நல்ல வாய்ப்பு

(கொழும்பு)

"தமிழ் சிங்கள இனங்களை பிரித்துவைப்பதற்கு சில அரசியல்வாதிகளுக்கு தற்போது நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது".

இவ்வாறு வண. பிரக்ஞா[illegible] சில்வி தேரோ கொழும்பு பொதுசன நூல் நிலையத்தில் சிங்கள மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் இலக்கிய விழாவில் உரையாற்றும்போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது.

பிரிக்க இன்பங்கண்டு அரசியல்வாதிகள் இருக்க சாதாரண பொதுமக்களே அடிபட்டு மடிகிறார்கள்.

பொலநறுவை [illegible] காலம் முதல் தமிழ் மொழி, சிங்கள வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருந்துவந்தது. கோட்டே அரசு காலத்தில், அரசவை தமிழ் மொழி ஆதரவுடன் வளர்க்கப்பட்டது.

சிங்களவரும் தமிழரும் இணைந்து ஒற்றுமையாக வாழ்ந்தனர். வெள்ளையர் ஆட்சியின்போது அரசியல் காரணங்களுக்காக பிரித்து வைக்கப்பட்டனர் அதன் பலா பலனையே நாம் இன்று அனுபவித்து வருகிறோம். (வே)

7000 விண்ணப்பம் ஆஸ்பத்திரியில் தேக்கம்

(கொழும்புத்துறை)

யாழ். போதனா வைத்தியசாலை பிறப்பு, இறப்பு பதிவகத்தில் சுமார் ஆறாயிரத்து 813 குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப் படிவங்களை எழுதக் கோரும் விண்ணப்பங்கள் பாரும் தேங்கிக் கிடக்கின்றன.

இச் சான்றிதழ்களை எழுதுவதற்கான பதிவாளர் இடமாற்றம் செய்யப்பட்டதால் 1990ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பிறப்புச் சான்றிதழ் விநியோகிக்கும் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (154)

விசேட கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை வெளிக்கள ஊழியர்களுக்கு விசேட சைக்கிள் கொடுப்பனவு வழங்கியுள்ளது. மேற்படி ஊழியர்களுக்கு இதுவரை மாதம் 40 ரூபா மட்டுமே விசேட கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்தது. இந்தக் கொடுப்பனவை இந்த வருடம் தை மாதம் முதல் 112 ரூபாவாக உயர்த்தியுள்ளது. குறிப்பிடத்தக்கது. (வி)

பாக். சிந்து முதல்வர் நேற்று காலமானர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சிந்துமாகாண முதலமைச்சர் ஜாம் சாதிக் அலி நேற்றுக்காலை காலமானார்.

இவர் கடந்த இரு மாதங்களாக இருதய நோயினால் பாதிப்புற்று சுகவீனமுற்றிருந்தார். இவருக்கு வயது 57 ஆகும்.

சிந்து மாகாண பேரவைச் சட்டப்படி, முதலமைச்சர் இறந்ததையடுத்து 14 நாட்களுக்குள் புதிய ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி பெனாசிர் பூட்டோவும் ஏனைய தலைவர்களும் புதிய தலைவர் தெரிவு பற்றி ஆராய்ந்து வருகின்றனர். (வே)

கிழக்கில் முஸ்லிம்கள் பூர்வீகமாயுள்ளனர்

(மட்டக்களப்பு)

"கிழக்கு மாகாண முஸ்லிம்களின் தாய்மார்களின் பூர்வீகம் கிழக்கு மாகாணமே தான்".

இவ்வாறு மட்டுநகர் மேலதிக அரச அதிபர் வை. அகமது லெப்பை கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

அரேபியாவிலிருந்து கிழக்கு மாகாணப் பகுதிக்கு வந்த முஸ்லிம்கள் தங்களுடன் பெண்களையும் அழைத்துவந்ததாக சரித்திரமில்லை. இங்கு வந்த முஸ்லிம்கள் கிழக்கு மாகாண பெண்களை மணந்து இங்கு குடியேறினார்கள். ஆகவே இங்கு வாழும் முஸ்லிம்களின் தாய்மார்களின் பூர்வீகம் கிழக்கு இலங்கையேயாகும்.

தவக்கால நற்சிந்தனை

"தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது வாழ்வீர்கள். ஆண்டவரும் உங்களோடு இருப்பார்". (ஆமோஸ் 5:14) நாம் கண்ணோட்டமின்றி செய்கிறோம் என்று கூறிக்கொண்டு மற்றவர்களை வாட்டி வதைப்பதிலும், அநியாயம் செய்வதிலும் பயனில்லை; எம்மைச் சுற்றியுள்ள அயலவனுக்கு இரங்கி, உடுத்தி, உணவளித்து, உண்மை அன்பு செய்வதே மேலான நோன்பு.

தாழ்வுற்ற நொறுங்கிய உள்ளத்தை இறைவன் என்றும் புறக்கணிப்பதில்லை.

— மோ. தார்சிசியஸ்

பொதுநல நாடுகளுக்கிடையே
குற்றவாளிகளை மாற்றும் சட்டம் விரைவில் அறிமுகமாகும்

(தொழுதி)

பொதுநல அமைப்பு நாடுகளுக்கிடையே குற்றவாளிகளை மாற்றிக்கொள்வது தொடர்பான சட்டம் விரைவில் கொண்டு முடிப்படுத்தப்படும் என நீதி அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

குற்றவாளிகளை மாற்றிக் கொள்ளும் பொதுநல நாடுகளுடனான ஒப்பந்தம் ஒன்றில் சட்ட வரைஞர் திணைக்களம் மூலமாக நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் இந்த யோசனையைத் தெரிவித்திருந்தார்.

இலங்கை நீதி வழங்கலில் கெடுபிடிகளை எதிர்நோக்கியவர்கள் தண்டிக்கப்படுவது அதிகரித்து வருவதையடுத்து இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

பெரும்பாலும் போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளே இவ்வாறு நாடுகடத்தப்படுகிறார்கள்.

தேவையற்ற
விடுமுறை நாட்களில் பாடசாலைகளை நடாத்துக

(சமூகப்பணி)

"எமக்குள்ளதை தேவையற்ற விடுமுறை நாட்களில் பாடசாலை நடாத்த வேண்டும்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மேற்பார்வைப் பொறுப்பை நடாத்திய ஒற்றுகடலில் ஏனைநாடுகளை தீர்மானித்துள்ளார்கள்.

மேலும் அவர்கள் தெரிவிப்பதாவது: சிறிலங்கா அரசின் விடுமுறை நாட்களில் பாடசாலை நடாத்துவதில் எவ்வித ஆர்வமும் இல்லாமல் இருக்கும் அதேவேளை எமது மக்களின் தேவை கருதி இவ்வாறு பாடசாலைகளை நடாத்த முன்வந்துள்ளோம்.

இதற்கான ஏற்பாடுகள் மிக விரைவில் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (152)

T-85 ரி-85 டாங்கிகள் பரீட்சையில் சித்தி

(தொழுதி)

சீனாவிலிருந்து வரவழைக்கப்பட்ட T-85 ரக டாங்கிகள் கடந்த இரண்டு நாட்களாக 'கனி கிலோ' இராணுவ நடவடிக்கையில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் கேர்ணல் முனசிங்க தெரிவித்தார்.

'கனி விக்ரம 3' நடவடிக்கையின் பின் நேற்று முன்தினம் காலை நான்கு 2 பயங்கரவாதிகள் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

மணிகள் திரும்பினர்

[யாழ்ப்பாணம்]

வலுனாரில் தங்கியிருந்த தொழுதிப் பணிகள் நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் சேர்ந்தனர்.

நேற்று நல்லூர் முத்திரைச் சந்தையிலிருந்த நாற்பத்தைந்து வாழ் பயணிகள் தொழுதி நோக்கிச் சென்றனர். (56)

ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவருகிறது.

இதையடுத்து அப்பகுதிகளை நோக்கி மோட்டார் குண்டு வீச்சு நடத்தப்பட்டதில் இடம் பெற்றுள்ளது.

கடந்த பிரதேசத்திலிருந்து பிரதேசத்திற்குள், வெளியிலிருந்து தற்காலிகமாக வேடுவர்களை விருந்து ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. (56)

இந்து சமய பேரவையின் பாதயாத்திரை ஆரம்பம்

(சமூகப்பணி)

இந்துசமயப் பேரவையினர் ஒழுங்குசெய்துள்ள நிலை பாதயாத்திரை இன்று காலை 8 மணிக்கு நல்லை ஆதீனத்தில் சமய நிகழ்வுகளுடன் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

பாதயாத்திரை 18ம் திகதி வரை நடைபெறும்.

பல திருத்தலங்களிற்றுசென்று இருக்கிறபாதயாத்திரையை நல்லை ஆதீன முதல்வர், நல்லூர் உதவி அரச அதிபர் உட்பட பல்வேறு சமயப்பெரியார்கள் தொண்டர்கள் ஆரம்பித்துவைப்பர். (56)

ராஜீவ் வரலாறு சோனியா எழுதுகிறார்

[புதுடில்லி]

ராஜீவ் காந்தியின் வரலாற்றை திருமதி சோனியா காந்தி எழுதிவருகிறார்.

ராஜீவ் காந்தியின் முதலாவது நினைவுதினத்தில் இப்புத்தகத்தை வெளியிடும் நோக்கில் திருமதி சோனியா மிகவேகமாக இப்புத்தகத்தை எழுதிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

படை முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல்

(சமூகப்பணி)

பூநகரி - கிளாலியிலிருந்த படையினர் அரசாங்க மொழி வடக்கு கரையோரப்பகுதி நோக்கி நேற்று பிற்பகல் வேளையில் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

நேற்று முன்னிரவு 2-30 மணியளவில் காரைநகர் முகாமிலிருந்தும் படையினர் பொன்னாலை வடக்கு கரையோரப்பகுதி நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

3 ஷெல்கள் இப்பகுதியில் வீழ்ந்து வெடித்தது. (56)

4 தமிழ் மீனவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக் கிராமத்தை சேர்ந்த நடவுகளை எடுப்பதாக பிரதமரும், பாதுகாப்புஇராஜாங்க அமைச்சருமான திரு. ட. பி. விஜயதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ. நா. மனித உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவுநிலை வெளியிட்டு அறிக்கையில், கடந்த மனித உரிமைகள் மீதும் மியன்மார் மன நாடு இலங்கை என வலியுறுத்தல் தெரிந்தவை. (மா)

வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று 500 ஆதரவு வந்து சேருவார்கள். திருகோணமலை 100 ஆதரவு இந்தியாவிலிருந்து வந்து சேருவார்கள் என்று தெரிவித்தார். (மா)

தமிழகத்திலுள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதிகள் எடுத்தாலே தெரிவிக்க வேண்டும் என்பதை செப்டெம்பர் 6ம் திகதி வரை அவகாசம் வழங்கியுள்ளது. (இ)

தமிழ் அகதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரச ஐ. நா. மனித உரிமை குழுவின் பிரதிநிதிகள் தமிழகத்தில் சுற்றுலா இந்திய அனுமதிக்க வேண்டுமெனவும் இந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (இ)

உலக கிண்ண கிரிக்கெட்
இங்கிலாந்து தெ. ஆபிரிக்கா வெற்றி பெற்றன

(மெல்போர்ன்)

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற இரு ஆட்டங்களில் இங்கிலாந்து, தென்னாபிரிக்காவும் வெற்றி பெற்றன.

தென்னாபிரிக்காவுக்கும், மேற்கிந்தியாவுக்குமிடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் நஷ்டத்திற்கு 200 ஓட்டங்களைப் பெற்றது. ஹேன்சன் 56 ஓட்டம்.

இதன் பின் துடுப்பெடுத்தாடிய மே.இ.தீவுகள் 38.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த 136 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சோலி 61 ஓட்டங்களை எடுத்தார்.

இங்கிலாந்து வெற்றி

அடுத்து நியூசிலாந்துக்கும், இங்கிலாந்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்மித்தேவியர் 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த 171 ஓட்டங்களைப் பெற்றது. நியூசிலாந்து 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த இயல் மொத்தம் 'ஹெமிறிக்' எறிந்த 4 விக்கெட்டுக்கள் வீழ்ந்திருந்தன. ஸ்மித்தேவியர் ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டுக்கள் நஷ்டத்திற்கு 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன் பின்பு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 40.4 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 173 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதன்மூலம் அரையிறுதிக்கு தெரிவாகும் நான்கு நாடுகளும் தவிர 4 போட்டிகளில் பங்குபற்றிய புள்ளிவிபரம் வருமாறு.

நியூஸிலாந்து - 8, இங்கிலாந்து - 7, இலங்கை - 5, தெ. ஆபிரிக்கா - 4, மே. இந்தியா - 4, பாகிஸ்தான் - 3, ஆஸ்திரேலியா - 2, இங்கிலாந்து - 0.

(கி)

நாடுகள் பெற்ற புள்ளிகள்

(கிரிக்கினி)

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இதுவரை ஒவ்வொரு நாடுகளும் தலா 4 போட்டிகளில் பங்குபற்றிய பின் புள்ளிவிபரம் வருமாறு.

நியூஸிலாந்து - 8, இங்கிலாந்து - 7, இலங்கை - 5, தெ. ஆபிரிக்கா - 4, மே. இந்தியா - 4, பாகிஸ்தான் - 3, ஆஸ்திரேலியா - 2, இங்கிலாந்து - 0.

(கி)

மரண அறிவித்தல்

திரு. ஞானப்பிரகாசம் தேவசகாயம்

உருப்பிராய் மிழக்கைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் தேவசகாயம் காலமாகிவிட்டார். இவர் பரிமளத்தின் அருமைக் கணவரும், இரஞ்சிதேவி, மரியசந்திரா, மரிய வனிதா, மரிய ஜெனிதா (இத்தாலி), செல்வச் பேதி, மெல்கிஸ்தவர (அமெரிக்கா), கியோமார் (சுவிஸ்), டட்லி (ஜெர்மனி), சோக்கிறடீஸ் (டென்மார்க்), லபோல் ஆரோன் அவர்களின் அன்புத் தந்தையும், பிதாவர், சந்திரசேகரம், மேதர், மரி ஆரோனிக்கா அன்பு மாமனாருமாவார். நிஷாந்தவின் (அமெரிக்கா) அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: தே. வனிதா

உருப்பிராய் மிழக்கு.
உருப்பிராய்.

(தி 6088)

இவ்விதழில் "எழுநாடு" வெளியீட்டுக் குழுவினரால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 13-3-1992 முதல் 19-3-1992 வரை அனுஷ்டிக்கப்படும் தேசிய துக்கதினம் காரணமாக வெளியிடப்படமாட்டாது.

Registered as a News Paper at the General Post Office